**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: STC No.252/2018**
**Deposition of witness for prosecution –PW–1**

| | | |
|---|---|---|
| Name | : | பழனி |
| F/H Name | : | செல்லக்கண்ணு |
| Village | : | காஞ்சிரங்குடி |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 03th day of March 2026.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எதிரியின் வீட்டில் வைத்து எதிரி என்னிடம் காசோலை கொடுத்தார் அப்போது நானும் எதிரியும் தான் அங்கே இருந்தோம். வீட்டின் வரவேற்பரையில் எதிரி காசோலையை கொடுத்தார். எதிரியின் வீட்டில் வைத்து கணக்கு வழக்கை நேரடியாக பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. எதிரி என்னிடம் கைப்பேசியில் எவ்வளவு தொகை என்று கேட்டார் நான் கைபேசியில் எவ்வளவுதொகை என்று சொன்னேன் அதன் பின்னர் எதிரி அந்த தொகைக்கு காசோலை கொடுத்தார். அந்த காசோலையில் தொகை மற்றும் பெயர், தேதி ஆகிய விவரங்களை எதிரி எழுதினாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. எழுதி கொண்டு வந்து எதிரி கொடுத்தார். காசோலையில் உள்ள விவரங்களை யார் எழுதினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த காசோலையில் உள்ள எதிரி பெயர் தொகை ஆகியவைகளை எழுதியது ஒரு பேனாவில்உள்ள மை என்றும் எதிரியின் கையெழுத்து வேறு ஒரு மை பேனா என்றும் சொன்னால் அதை பற்றி என்னால் கூற முடியாது. புகார்தரார் பாலம்மாள் என்பவருக்கு இந்த தொழில் சம்பந்தமான எந்த விவரமும் எதிரியை பற்றிய எந்த பழக்க வழக்கமும் கிடையாது. எதிரி மேற்படி நிறுவனத்திற்கு பணம் செலுத்துவதாக சொல்லப்பட்ட எந்த விவரங்களும்

பாலம்மாள் என்பவருக்கு தெரியாது. மேற்படி பாலம்மாள் என்பவரை இந்த வழக்கில் நான் சாட்சியாக விசாரிக்கபோவதில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி புகார்தாரர் பாலம்மாள் என்பவரை எதிரி தரப்பில் சாட்சியாக விசாரிப்பதற்கு நான் சம்மதிக்கவில்லை. மேற்படி பாலம்மாள் 4ம் வகுப்பு வரை படித்திருக்கிறார்கள். பாலம்மாள் என்பவர் கையெழுத்துபோடுவார் அவருக்கு எழுத படிக்க தெரியாது. மேற்படி பாலம்மாள் புகார்தாரர் தரப்பு சான்றாவணம் 2 ஆவணத்தில் அதில் என்ன எழுதி இருக்கிறது என்று தெரியாத நிலையில் கையெழுத்திட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே என்னை குறுக்கு விசாரணையில் 2017–2018 ஆண்டிற்கான வருமான வரி கணக்கில் வராக்கடன் குறித்து குறிப்பிட்டுள்ளேனா என்பது குறித்து எனது ஆடிட்டரிடம் கேட்டு தகவல் சொல்வதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அது குறித்து எந்த ஆவணமும் தற்போது என் வசம் இல்லை. எதிரி எங்கள் நிறுவனத்தில் இருந்து பொருட்கள் பெற்றது சம்பந்தமாக E–way Bill ஆவணங்களை எனது ஆடிட்டரிடம் இருந்து பெற்று ஆஜர் செய்கிறேன் என்று ஏற்கனவே சாட்சியம்அளித்த நிலையில் தற்போது மேற்படி ஆவணம் என் வசம் இல்லை. ஏற்கனவே சாட்சியத்தின் போது எதிரிக்கு பொருட்கள் சப்ளை செய்தது சம்பந்தமான பில்லை பார்த்து தான் சொல்ல முடியும் என்று சாட்சியம் அளித்த நிலையில் தற்போது அந்த ஆவணம் என்னிடம் இல்லை. ஏற்கனவே எனது குறுக்கு விசாரணையில் 18.03.2018 அன்று நானும் எதிரியும் கணக்கு வழக்குகளை பார்த்ததில் எதிரியிடம் எவ்வளவு தரவேண்டும் என்பது குறித்து எந்த ஆவணமாவது எழுதி தரப்பட்டதா என்று கேட்டதில் கம்பெனியில் பார்த்து தான் சொல்ல முடியும்என சாட்சியம் அளித்ததின் அடிப்படையில் தற்போது எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எந்த வாகனத்தில் சரக்கு அனுப்பப்பட்டது என ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும் என சொல்லிய நிலையில் தற்போது அந்த ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. எதிரிக்கு எனது கம்பெனி மூலம் என்ன பொருட்களை சப்ளை செய்தேன் என வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகார் மனுவிலும்கூறவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே சாட்சியம் அளித்த ரமேஷ் என்பவர் மீது நான் தாக்கல் செய்த காசோலை மோசடி வழக்கு நான் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராககதால்சமூகம் நீதிமன்றமானது மேற்படி வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது என்றால் சரியல்ல. ரமேஷ் என்பவர் மீதும் சமூகம் நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கில் இந்த மேற்படி வழக்கில் கூறிய அதே விவரங்களை தான் கூறி புகார் அளித்துள்ளேன்

என்றால் ரமேஷ் என்பவர் மீது ஹாலோ மற்றும் பேவர் பிளாக் வாங்கிய வகையில் ஏற்பட்ட பண நிலுவைக்காக வழக்கு தாக்கல் செய்தேன். எதிரிக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் ரமேசுக்கும் எதிரிக்கும் தொழில் முறையில் ஏற்பட்ட பழக்கத்தின் அடிப்படையில் அவர்களுக்குள் ஏற்பட்ட காசோலை பரிவர்த்தனை இருந்து வந்த நிலையில் மேற்படி ரமேசுக்கும் எனக்கும் ஏற்பட்ட தாவா சம்பந்தமாக ரமேஷ் என்பவர் என்னிடம் வழங்கிய எதிரியின் கையெழுத்து மட்டும் இட்ட நிரப்பபடாத காசோலையை வைத்து ரமேஷ் என்பவருக்கும் எனக்கும் எற்பட்ட பிரச்சனை காரணமாக ரமேஷ் என்பவர் மீதும் எதிரி மீதும் ஒரே விவரங்களை கூறி காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை
இல்லை.

(ஒப்பம்/– N. நிலவேஸ்வரன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.